**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## O.S. No.132 /2020

**04.09.2024**

## P.W.1- சேனாதிபதி

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தற்போது விளாம்பட்டியில் மளிகை கடை வைத்துள்ளேன். எனக்கு பூர்வீகம் மதுரை மாவட்டம் கல்லூத்து பெருமாள்பட்டி ஆகும். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலம் தற்சமயம் திண்டுக்கல் மாவட்டம் மட்டப்பாறை கிராமத்தில் குடியிருந்து வருவதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி மொக்கராசு, 4ம் பிரதிவாதி எனக்கு ரத்த சம்மந்தமாக என்றால் தூரத்து சொந்தம் ஆவார்கள். எனது அப்பாவிற்கு பாட்டி என்று சொல்வது கருப்பாயி என்றால் சரிதான். எனது தந்தை 2016ம் ஆண்டு இறந்துவிட்டார். தாவா சொத்து எனக்கு பூர்வீக வகையில் எனது அப்பாவின் பாட்டி கருப்பாயிக்கு பாத்தியப்பட்டது. அதன்பின்னர் எனது பாட்டி எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்துள்ளார். எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பூர்வீக சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண்.251/7 ஆகும். மேற்படி புல எண்ணில் எத்தனை உட்பிரிவுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி புல எண்ணில் 2 ஏக்கர் 54 சென்டு நிலம் உள்ளது. தாவா புலத்தின் நான்கு மால்கள் எனக்கு ஞாபகமில்லை. பிராதில் புல எண் மட்டும் சொல்லியுள்ளேன், நான்கு மால்கள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் எனது அனுபவத்தில் இருந்திருந்தால் நான்கு மால்களையும் சொல்லியிருப்பேன் என்றால் வெளியூரில் இருப்பதால் அவ்வப்போது போய் பார்ப்பதால் எனக்கு தெரியாது. இதர வாதிகளில் 1வது வாதிக்கு தாவா புலத்தின் நான்கு மால்கள் பற்றி தெரியும். கருப்பாயி எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. கருப்பாயிக்கு துரைச்சாமி (எ) மாயாண்டித்தேவர், ஒச்சாத்தேவர் என்று 2 ஆண் மக்கள் வாரிசுகள் ஆவார்கள். நான் துரைச்சாமி (எ) மாயாண்டித்தேவர் வகையறா ஆவேன். ஒச்சாத்தேவருக்கு வாரிசுகள் இல்லை. கருப்பாயி, ஒச்சாத்தேவர்

ஆகிய இல்லாத நபர்களின் பெயர்களை கொடிவழி ஜாபிதாவாக சொல்லி பிரதிவாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் மதுரை என்று சொல்வார்கள், ஆனால் எனக்கு சரியாக தெரியாது. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் பேச்சியம்மாள், பாக்கியவதி, ராணியம்மாள ஆகிய மூவா ஆவார்கள். பேச்சியம்மாளின் கணவர் தேவராஜ் என்றால் சரிதான். தேவராஜின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. தேவராஜின் தந்தை வழி தாத்தா இளையபெருமாள்தேவர் என்றும், அவருக்கு தான் தாவா சொத்து பூர்வீக சொத்து பாத்தியம என்றால் சரியல்ல. இளையபெருமாள்தேவரின் மகன் தான் ஒச்சாத்தேவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒச்சாத்தேவரின் மகன் வழி பேரன்கள் தான் மொக்கராசு மற்றும் மாரிமுத்து என்றால இருக்கலாம். ஒச்சாத்தேவர் பெயரில வருவாய்த்துறை ஆவணங்களில் இருந்ததால் இல்லாத ஒரு ஒச்சாத்தேவரை எனக்கு சொந்தம் என்று சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கம் 50 வருடங்களுக்கு பார்த்தேன். மேற்படி 50 ஆண்டுகளில் என்ன என்ன வில்லங்கம் ஏற்பட்டது என்றால் மாயாண்டித்தேவரும், எனது அப்பாவும் சேர்ந்து ஒரு ஒத்தி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். பின்பு எனது அப்பா மட்டும் ஒரு ஒத்தி பத்திரம் பதிவு செய்துள்ளார், 2014ல் மேற்படி ஒத்தியை செல்லடித்துள்ளார். மேற்படி ஒத்திகள் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி ஒத்திகள் 1960 காலகட்டத்திற்கு பின்பு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1960 ஆண்டிற்கு 40 வருடங்கள் முன்பு இளையபெருமாள் ஒரு பதிவு ஒத்தி ஆவணம் ஏற்படுத்தியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1922ல் தாவா சொத்தில் இளையபெருமாளால் ஒத்தி ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. கருப்பாயி திருமணம் செய்து இறந்து போனது கல்லூத்து பெருமாமள்பட்டி. கருப்பாயின் கணவர் மாயாண்டித்தேவர் என்றால் சரிதான். கருப்பாயி, மாயாண்டித்தேவர், ஒச்சாத்தேவர் ஆகியோர்கள் சம்மந்தமாக நிருபணம் செய்வதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் பழைய பட்டா உள்ளது. மேற்படி பழைய பட்டா எந்த வருடம் சார்ந்தது என்றால் ஞாபகமில்லை, அதை நான் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். தாவா சொத்தை ஒட்டிய 85 சென்டு நிலத்தை எனது தந்தை எனக்கும், எனது அண்ணனுக்கும் எழுதி கொடுத்தார். மேற்படி ஆவணம் எனது தகப்பனார் மேற்படி 85

சென்டுகள் மட்டுமே பாத்தியப்பட்டது என எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை 1/3 பங்கு தான் எழுதிக்கொடுத்தார். அசல் பிராதில் பக்கம் எண்.5ல் பத்தி 10ல் 28.04.2014ல் 1/3 பங்கை லட்சுமணன் என்பவருக்கு ஒரு பதிவுகிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் எனது அப்பா கொடுத்து தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். எனது அப்பா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்தால் அதில் பூர்வீகமாக 85 செண்டு கிடைத்ததாகவும், அதை எங்களுக்கு தானமாக எழுதிக்கொடுத்ததாகவும் விவரங்கள் காணப்படும் என்றால் (சாட்சி மௌனம் சாதிக்கிறார்).

(வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.04 17:31:33 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.